Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 85 of 2023**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.3**
Defence
Court

| Name | சூர்யா |
|---|---|
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 2nd day of September 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 2nd day of September 2025.**

**எதிரிகள் 1 முதல் 3 ஆஜர்.**

**முதல்விசாரணை**:

நான் நெய்வேலி மாற்றுக்குடியிருப்பில் வசிக்கிறேன். அ.சா-2 சிவா எனது கணவர். அ.சா-1 ராஜலட்சுமி என் கணவரின் அக்கா. இறந்த ஞானசெல்வம் என் கணவரின் அக்கா

கணவர். ஆஜர் எதிரிகள் எனது நாத்தனார் ராஜலட்சுமியின் வீட்டிற்கு பக்கத்தில் வசிக்கிறார்கள். நாங்கள் நெய்வேலி மாற்றுக்குடியிருப்பில் வீடு கட்டிக்கொண்டிருந்ததால், எனது நாத்தனார் ராஜலட்சுமியின் வீட்டில் சம்பவ சமயத்தில் தங்கியிருந்தோம். கடந்த 18.08.2022 அன்று இரவு 09.30 மணியளவில் என் நாத்தனார் வீட்டு வாசலில் சண்டை நடந்துக்கொண்டிருந்தது, அப்போதுதான் நாங்கள் வீட்டிற்கு வந்தோம். 1வது எதிரி உக்கிரவேல் ஞானசெல்வத்தை ஒக்கால ஓழி, தேவிடியா பையா என்று அசிங்கமாக பேசி தைலந்தடியால் இடது பக்க தலையில் அடித்தார். அவரது மனைவி இரும்பு பாறையால் ஞானசெல்வத்தின் தலையில் அடித்தார். ஞானசெல்வம் தடுமாறி கீழே விழப்போனபோது ராஜலட்சமி பிடிக்க போனார். அப்போது 1வது எதிரியின் மனைவி ஆனந்தி ராஜலட்சுமியின் முதுகில் குத்தினார். மூன்றாவது எதிரி ராயப்பிள்ளை கட்டையால் ஞானசெல்வத்தின் தலையில் அதே பகுதியில் தாக்கினார். கண்ணில் அவருக்கு காயம் ஏற்பட்டது. நாங்கள் அவர்களை விலக்கிவிட்டோம். எதிரிகள் பேசிக்கொண்டே சென்றுவிட்டார்கள். ஞானசெல்வத்திற்கு இரத்த காயம் ஏற்பட்டதால் மருங்கூர் மருத்துவமனைக்கு எனது கணவர் மற்றும் ராஜ்குமார் அழைத்துச் சென்றார்கள். அங்கிருந்து 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து கடலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கே ஞானசெல்வத்தின் வாக்குமூலத்தை போலிசார் வாங்கிக்கொண்டார்கள். பிறகு இரண்டு மூன்று நாட்களில் வீட்டிற்கு ஞானசெல்வத்தை அழைத்து வந்துவிட்டோம். சிறிது நாட்களில் ஞானசெல்வத்திற்கு தலைவலியும், கண்வலியும் ஏற்பட்டது. அதனால் ஜிப்மர் மருத்துவமனைக்கு ஞானசெல்வத்தை அழைத்துச் சென்றார்கள். அங்கே தலையில் இரத்தக் கசிவு இருப்பதாகக் கூறி அறுவை சிகிச்சை செய்தார்கள். 10 நாட்கள் ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சை அளித்தார்கள். அங்கே மாற்றம் தெரியாததால் சென்னை ராஜிவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அழைத்துச்சென்றார்கள்.

இரண்டு மூன்று நாட்கள் அங்கே சிகிச்சையிலிருந்து ஞானசெல்வம் 28.11.2022 அன்று மதியம் 01.40 மணிக்கு இறந்துவிட்டார். அங்கிருந்து வீட்டிற்கு வரவழைத்து பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தோம். அவரது மனைவி ஞானசெல்வத்திற்கு உடலில் எந்த நோயும், குறையும் இல்லை என்பதால் சம்பவத்தின் போது ஏற்பட்ட காயத்தினால்தான் இறப்பு ஏற்பட்டது எனக் கூறி பிரேத பரிசோதனை செய்ய வைத்தார். பிறகு பிரேதத்தை எங்களிடம் ஒப்படைத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :

நானும் எனது கணவரும் என் நாத்தனார் வீட்டிற்கு இரவு 09.30 மணியளவில் வந்தோம். நான் வரும்போதுதான் என் கணவரும் வந்தார். நான் பார்க்கும் போது எதிரிகள் அடித்துக்கொண்டிருந்தார்கள். என் கணவர் தான் வரும்போது எதிரிகள் அடித்து முடித்துவிட்டிருந்ததாக சொல்லியிருந்தால் அது தவறானது. சம்பவம் நடக்கும்போது ஊர்த்தலைவர் ராமதாஸ் இருந்தார். அது அல்லாமல் ஏழுமலை இருந்தார். அங்கு சுமார் நான்கைந்து நபர்கள் அங்கே இருந்தார்கள். சுமார் 10, 20 நபர்கள் இருந்ததாக என் கணவர் சொல்லியிருந்தால் அவர் பார்வைக்கு அவ்வாறு தெரிந்திருக்கலாம். ஞானசெல்வத்தை என் கணவரும், ராஜ்குமாரும் இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். ராஜலட்சுமி தானும், எனது கணவரான தனது தம்பி சிவாவும் இருசக்கர வாகனத்தில் ஞானசெல்வத்தை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சொல்லியிருந்தால் அது தவறானது. மருங்கூர் மருத்துவமனையிலிருந்து கடலூர் மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் அழைத்துச் சென்றார்கள். அப்போது நான் அங்கு இல்லை. கடலூர் மருத்துவமனைக்கு சென்று ஞானசெல்வத்தை நான் பார்க்கவில்லை. இரண்டு மூன்று நாட்கள் கடலூர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். பிறகு ஞானசெல்வம் வீட்டிற்கு வந்துவிட்டார். சுமார் 10, 15 நாட்களில் ஜிப்மர்

மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். ஜிப்மர் மருத்துவமனையில் நான் ஞானசெல்வத்தை பார்த்தேன். சுமார் 10, 13 நாட்கள் ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். அங்கிருந்து நேரடியாக சென்னை ராஜிவ் காந்தி மருத்துவமனைக்கு ஞானசெல்வத்தை சிகிச்சைக்கு சேர்த்தார்கள். ஞானசெல்வம் இறக்கும் சமயத்தில் எனது கணவர் நெய்வேலியில் எங்கள் வீட்டில் இருந்தார். ஞானசெல்வத்தின் பிரேதத்தை வீட்டிற்கு கொண்டு வந்த பிறகுதான் நான் பார்த்தேன். எனது கணவர் சென்னை சென்று ஆம்புலன்ஸில் பிரேதத்தை ஏற்றிக்கொண்டு வந்தார். பிரேதத்தை ஞானசெல்வத்தின் வீட்டில் தான் வைத்தார்கள். 29.11.2022 அன்று பிரேதத்தை வீட்டிற்கு அழைத்து வந்தார்கள். வீட்டிற்கு வந்த பிறகுதான் நியாயம் கிடைக்க வேண்டும் என எதிரிகளின் வீட்டிற்கு கொண்டுபோய் பிரேதத்தை வைத்தோம். ராஜலட்சுமி நேரடியாக பிரேதத்தை எதிரி வீட்டில் வைத்ததாக சொல்லியிருந்தால் அது தவறானது. எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றாலும், எதிரிகளை அளைக்கழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ராஜலட்சுமி தனது கணவர் இறந்த காரணத்தினால் பித்து பிடித்தது போல் இருந்தார் என்றால், ஒருசில நேரத்தில் அவ்வாறு இருந்தார்.

**மறு விசாரணை** :

இல்லை என்று கூறப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*

*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 85 of 2023**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.2**
Defence
Court

| | |
|---|---|
| Name | **சிவா** |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | **இந்து** |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 2nd day of September 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 2nd day of September 2025.**

**எதிரிகள் 1 முதல் 3 ஆஜர்.**

முதல்விசாரணை:

நான் நெய்வேலியில் வசிக்கிறேன். அ.சா-1 ராஜலட்சுமி எனது மூத்த அக்கா. என் அக்கா வீட்டிற்கு மூன்றாவது வீட்டில் ஆஜர் எதிரிகள் குடியிருக்கிறார்கள். என் அக்கா கணவர் இறந்த ஞானசெல்வம் ஆகும். கடந்த 18.08.2022 தேதி இரவு 09.30 மணியளவில் நெய்வேலியில் நான் வீடு கட்டிக்கொண்டிருந்ததால் என் அக்கா வீட்டில் தங்கியிருந்தேன். வேலைக்கு ஆட்களை விட்டுவிட்டு பொருட்களை வாங்கிக் கொடுத்துவிட்டு இரவு 09.30 மணியளவில் நான் வந்துவிட்டேன். நான் எனது வாகனத்தை நிறுத்திவிட்டு வருவதற்குள் எதிரி உக்கிரவேல் கட்டையால் என் மாமா ஞானசெல்வத்தை தலையில் அடித்தார். இரண்டாவது எதிரி ஆனந்தி இரும்பு கடப்பாறையால் ஞானசெல்வத்தின் தலையில் அடித்தார். எதிரி ராயப்பிள்ளை இடது பக்க தலையில் மற்றும் கண்ணில் கட்டையால் அடித்தார். நாங்கள் ஞானசெல்வத்தை மருங்கூர் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். அங்கிருந்து 108 ஆம்புலன்ஸ் மூலமாக பண்ருட்டி மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள். எங்கள் ஊர்க்காரரான ராஜ்குமார் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி அழைத்துச்சென்றார். பண்ருட்டி மருத்துவமனையில் தலையில் தையல் போட்டு வீட்டிற்கு ஞானசெல்வத்தை அழைத்துவந்துவிட்டார்கள். பண்ருட்டி மருத்துவமனையில் போலிசார் சண்டை குறித்து ஞானசெல்வத்தை விசாரித்தார்கள். வீட்டிற்கு வந்த ஞானசெல்வத்திற்கு சிறிது நாட்களில் தலைவலி வந்துவிட்டது. அவரது பேச்சு நின்றுவிட்டது. பிறகு கண் பார்வை போய்விட்டது. கடலூர் அரசு மருத்துவமனைக்கு ராஜ்குமார் அழைத்துச் சென்றார். நான் வீட்டு வேலை பார்க்க சென்றுவிட்டேன். கடலூர் அரசு மருத்துவமனையில் முடியாது எனக் கூறி ஜிப்மர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள். அங்கே தலையில் ஸ்கேன் எடுத்த

பிறகு மூளைக்கு செல்லும் இரத்தம் அடித்த காயத்தினால் நின்றுவிட்டதாகக் கூறி என்னிடம் எழுதி வாங்கிக்கொண்டார்கள். அதன்பிறகு ஜிப்மர் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்தார்கள். ஜிப்மர் மருத்துவமனையில் வேறு எங்காவது அழைத்துச்செல்ல சொல்லிவிட்டார்கள். எனவே, சென்னை ராஜிவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு ஞானசெல்வத்தை அழைத்துச்சென்றோம். 18.11.2022 ல் சென்னை ராஜிவ் காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். 10 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். 28.11.2022 அன்று மதியம் 01.40 மணியளவில் அவர் இறந்துவிட்டதாக நான் வீட்டில் இருந்தபோது தகவல் கிடைத்தது. அங்கிருந்து பிரேதத்தை ஞானசெல்வம் வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டோம். சந்தேகத்தின்பேரில் என் அக்கா பிரேதத்தை பரிசோதனை செய்ய வேண்டும் என முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்தில் எழுத்து மூலமாக புகார் கொடுத்தார். முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்ய அனுப்பிவிட்டார்கள். 30.11.2022 ஆம்தேதி பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை ஒப்படைத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என் அக்காவின் வீட்டிற்கு நான் வரும்போது எதிரிகள் அடித்து முடித்துவிட்டார்கள். என் அக்கா நான் சம்பவ சமயத்தில் வீட்டில் இருந்ததாக சொல்லியிருந்தால் பதற்றத்தில் மாற்றி சொல்லியிருப்பார். நான் வீட்டிற்கு வருவதற்குள் சம்பவம் நடந்து முடிந்துவிட்டது என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் எனது மாமாவை மருங்கூர் மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன். 108 ஆம்புலன்ஸ் அங்கே தயாராக இருந்தது. அங்கிருந்து பண்ருட்டி மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸில் அழைத்து வந்துவிட்டோம். ராஜ்குமார் ஆம்புலன்ஸில் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாக என் அக்காவும், மாமாவும்

மற்றும் நானும் சொல்லியிருந்தால் அது சரிதான். ஆம்புலன்ஸை ராஜ்குமார் வரவைக்கவில்லை. ஆம்புலன்ஸில் ராஜ்குமார் ஞானசெல்வத்துடன் சென்றார். கடலூர் மருத்துவமனையில் 20 நாட்கள் ஞானசெல்வம் சிகிச்சையில் இருந்தார். அந்த 20 நாட்களும் அவரை நான் போய் பார்க்கவில்லை. ஜிப்மர் மருத்துவமனையில் நான், ராஜ்குமார், அர்னால்டு, வள்ளி, ஜெயபால் ஆகியோர் ஞானசெல்வத்தை அழைத்துச்சென்று சேர்த்தோம். சென்னை ராஜிவ் காந்தி மருத்துவமனைக்கு ஜிப்மர் மருத்துவமனையிலிருந்து நாங்கள் ஆம்புலன்ஸில் கொண்டுபோய் சேர்த்தோம். காரில் கொண்டுபோய் சேர்த்ததாக எனது அக்கா சொல்லியிருந்தால, அது தவறானது. பண்ருட்டி மருத்துவமனையிலிருந்து கடலூர் மருத்துவமனைக்கு நான் கொண்டுபோய் சேர்க்கவில்லை எனது அக்கா நான் இருசக்கர வாகனத்தை ஓட்ட பின்னால் ஞானசெல்வமும், என் அக்காவும் அமர்ந்துக்கொண்டு கடலூர் மருத்துவமனையில் சேர்த்ததாக சொல்லியிருந்தால் பதற்றத்தில் அவ்வாறு சொல்லியிருப்பார். சம்பவ சமயத்தில் 10, 20 நபர்கள் இருந்திருப்பார்கள். சம்பவ சமயத்தில் கலையரசன், சிவா, சூர்யா, ராமதாஸ் ஆகிய நால்வர் மட்டும் இருந்ததாக சொல்லியிருந்தால், பதற்றத்தில் அவ்வாறு சொல்லியிருப்பார். நாங்கள் எல்லோரும் இருந்தோம். ஞானசெல்வம் சென்னையில் இறந்துவிட்டதாக நான் வீட்டிலிருந்தபோது போன் மூலமாக தகவல் வந்தது. தகவல் கேள்விப்பட்டு நான் சென்னை சென்று ஆம்புலன்ஸில் ஞானசெல்வத்தின் பிரேதத்தை ஞானசெல்வம் வீட்டிற்கு அழைத்து வந்தோம். சிறிது நேரம் கழித்துதான் எதிரிகளின் வீட்டிற்கு பிரேதத்தை கொண்டு சென்றோம். என் மாமா ஞானசெல்வம் இறப்பதற்கு முன்பாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. இறந்த பிறகு பிரேதத்தை கொண்டு வந்த அன்றுதான் விசாரித்தார்கள். போலிசார் விசாரணையில், 29.11.2022 அன்று பிரேதத்தை வீட்டிற்கு கொண்டுவந்த பிறகுதான் நான் பார்த்ததாக சொல்லியிருந்தால் அது தவறானது. நான் சொன்னது போல்

சம்பவம் நடக்கவில்லை என்றாலும், இறந்தவர் எனது மாமா என்ற காரணத்தினால், எதிரிகளை அளைக்கழிக்க வேண்டும் என்பதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை என்று கூறப்பட்டது.

| |
|---|
| *Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*<br>*Tmt.G.Saraswathi*<br>*I Additional District Judge*<br>*Cuddalore.* |

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 85 of 2023**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.1**
Defence
Court

| | |
|---|---|
| Name | ராஜலட்சுமி |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 2nd day of September 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 2nd day of September 2025.**

**எதிரிகள் 1 முதல் 3 ஆஜர்.**

**முதல்விசாரணை**:

நான் கீழகொள்ளையில் வசிக்கிறேன். ஆஜர் எதிரிகள் நான் குடியிருக்கும் வீட்டிற்கு பக்கத்தில் வசிக்கிறார்கள். வாதி ஞானசெல்வம் எனது கணவர். சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக எங்கள் வீட்டில் வாசலில் இருந்த வேப்பமரத்தை என் கணவர் வெட்டி வீட்டு அருகே போட்டுவிட்டார். பிறகு நாங்கள் வேலைக்கு சென்றுவிட்டோம். இரவு 9.30 மணிக்கு வீடு திரும்பினோம். அப்போது அங்கே மரத்தை காணவில்லை. வாசலில் நின்று யார் மரத்தை எடுத்தார்கள் என்று நானும் என் கணவரும் கேட்டோம். ஆஜர் எதிரிகள் மூவரும் தாங்கள் தான் மரத்தை எடுத்தாகவும் உங்களால் என்ன செய்ய முடியும் என கூறி எங்களை அசிங்கமாக திட்டினார்கள். 1வது எதிரி உக்கிரவேல் எனது கணவரை நெஞ்சிலும் முதிகிலும் கட்டையால் இடது மண்டையிலும் தாக்கினார். 2 வது எதிரி ஆனந்தி எனது முதுகில் கையால் குத்தினார். ஆனந்தி கடப்பாரையால் எனது கணவரின் தலையில் அடித்தார். 3 வது எதிரி ராயர்பிள்ளை கட்டையால் எனது கணவரின் இடது கண்ணில் தாக்கினார். எனது தம்பி சிவா, தம்பி மணைவி சூரியா, கலையரசு, ராமதாஸ் ஆகியோர் சம்பவத்தை பார்த்தார்கள். என் கணவரை பண்ருட்டி மருத்துவமணைக்கு அழைத்து சென்றோம். பிறகு மேல்சிகச்சைக்காக கடலூர் அரசு மருத்துவமணைக்கு சென்றோம். அங்கு இருந்து ஒரு வாரம் பிறகு ஜிப்மர் மருத்துவமணைக்கு என் கணவரை சிகச்சைக்கு அழைத்து சென்றார்கள். அங்கேயும் சிகிச்சை செய்ய முடியாமல் வீட்டிற்கு அழைத்து வந்த விட்டோம். பின்னர் சென்னை ராஜிவ் காந்தி மருத்துவமணைக்கு அழைத்து சென்றோம். 10 நாட்கள் சிகிச்சை அளித்தார்கள். சிகிச்சை பலன் அளிக்காமல் என் கணவர் இறந்துவிட்டார். கடலூர் அரசு மருத்துவமணையில் எனது கணவர்

சிகிச்சையில் இருந்தபோது எனது கணவரிடம் போலிசார் புகார் வாக்குமூலும் வாங்கி சென்றார்கள். காண்பிக்கப்பட்ட புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் எனது கணவர் உடையது. **அது அதசாஆ 1 ஆகும்.** முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமணையில் எனது கணவரின் உடலை பிரோத பரிசோதனை செய்து பிரேதத்தை என்னிடம் ஒப்படைத்தார்கள். எனது கணவரை தாக்க பயன்படுத்திய ஆயுதங்கள் - கடப்பாரை, 2 தடிகள், சான்று பொருள் 1 வரிசை ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**:

ஆஜர் எதிரிகள் மூவரும் ஒரே வீட்டில் குடியிருக்கிறார்கள். அவர்களுடன் உக்கிரவேலின் பெற்றோரும் அந்த வீட்டில் குடியிருக்கிறார்கள். பொறம்போக்கு இடம் குறித்து எங்களுக்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை உள்ளது. அந்த பொறம்போக்கு இடம் குறித்த பிரச்சனைக்கு பிறகு பார்த்துகொள்ளலாம் என்று புகார் கொடுக்கவில்லை. 10 அடி தொலைவில் தான் எதிரிகளின் வீடு உள்ளது. காலை 7 மணியளவில் எனது கணவர் வேப்பமரத்தை வெட்டினார். நானும் அப்போது உடன் இருந்தேன். வீட்டிற்கு முன்பாக வேப்பமரத்தை சாயித்து விட்டு வேலைக்கு சென்றுவிட்டோம். வேப்பமரத்தை வெட்டி சாயித்த விவரத்தை போலிசாரிடம் சொல்லவில்லை. போலிசார் விசாரணையில் நானும் எனது கணவரும் அன்று வேலைக்கு சென்றுவிட்டதாக சொன்னேன். வேப்பமரத்தை வெட்டும் போது கலையரசன், ராமதாஸ் பாத்தார்கள். நானும் எனது கணவரும் இருந்தோம். மரத்தை காணவில்லை என நானும் எனது கணவரும் சத்தம் போட்டோம். நானும் எனது கணவரும் சேர்ந்து சத்தம் போட்டதாக என் கணவர் புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார். என்னை ஆனந்தி முதுகில் குத்தினார். 1வது எதிரி உக்கிரவேலும் என்னை முதுகில் குத்தினார். எனக்கு உள்காயம் தான் எற்பட்டது. நான் அரசு மருத்துவமணையில் அதற்கு ஊசி போட்டுக்கொண்டேன். போலிசார் விசாரணையில்

நான் மருந்தகத்தில் இருந்து மருந்து வாங்கி போட்டுகொண்டதாக சொல்லியிருந்தால் அது சரியானது. நான் அரசு மருத்துவமனைக்கு சென்று ஊசி போட்டுக்கொண்டதை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. எனது கணவருக்கு சம்பவ சமயத்தில் 40 வயது இருக்கும். எனது கணவர் எந்த ஒரு நோய் குறித்தும் சிகிச்சை பெறவில்லை. கலையரசும், ராமதாசும் நாங்கள் போட்ட சத்தத்தை கேட்டு வந்து விலக்கிவிட்டார்கள். சிவாவும் சூரியாவும் சம்பவம் நடக்கும் போது வீட்டிற்குள் இருந்தார்கள். சிவா எனது தம்பி அவர் பக்கத்து கிராமம் ஆன NLC மாற்று குடியிருப்பில் வசிக்கிறார். நான் குடியிருக்கும் வீட்டில் இருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் சிவா குடியிருப்பு உள்ளது. நானும் என் கணவரும் சம்பவம் நடந்தவுடன் பண்ருட்டி மருத்துவமனைக்கு சென்றோம். 108 ஆம்புலன்ஸ்ல் சென்றோம். சிவா ஆம்புலன்ஸ்யை வரவைத்தார். ராஜ்குமார் வரவைத்தாக போலிசார் விசாரணையில் சொல்லியிருந்தால் அது தான் சரியானது. நான் தற்போது மறந்துவி்.டடேன். மறுநாள் காலை பண்ருட்டி மருத்துவமனையில் இருந்து கடலூர் அரசு மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் சிவா அழைத்து சென்றார். நான் என் கணவரை பிடித்து கொண்டு சென்றேன். என் கணவர் அப்போது நிதானமாக இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. என் கணவருக்கு உண்மையிலே கொடும் காயம் எற்பட்டுயிருந்தால் கடலூர் அரசு மருத்துவமனைக்கு பண்ருட்டி மருத்துவமனையில் இருந்து அவர்களாக அனுப்பி இருப்பார்கள் என்றாலும் நாங்களாக அவரை அழைத்து சென்றிருக்க மாட்டோம் என்று சொன்னால் சரியல்ல. அடிதடி வழக்கு என்று சொல்லி கடலூர் அரசு மருத்துவமனையில் நாங்களாக சிகிச்சைக்கு சேர்த்தோம். பண்ருட்டி மருத்துவமனையில் எதாவது மருத்துவ குறிப்பு கொடுத்தார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை. கடலூர் அரசு மருத்துவமனையில் என் கணவர் 1 வாரம் சிகிச்சையில் இருந்தார். கடலூர் மருத்துவமனையில் இருந்து நாங்களாக வெளியே வந்துவிட்டோம் என்று

சொன்னால் சரியல்ல. எங்களுக்கு எதிராக ஆஜர் எதிரிகளும் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். 1வது எதிரிக்கு பிணை எனது கணவர் மருத்துவ அலோசனைக்கு எதிராக சிகிச்சையில் இருந்து வெளியே வந்த காரணத்திற்காக கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. கடலூர் அரசு மருத்துவமணையில் இருந்து வந்த பிறகு 15 நாட்கள் நானும் எனது கணவரும் முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்தில் நிபந்தனை கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். 21ம் தேதி கடலூர் அரசு மருத்துவமணையில் இருந்து எனது கணவரை விடுவித்தார்கள் மாதம் எனக்கு ஞாபகம் இல்லை. எனது கணவருக்கு தலையில் தொடர்ந்து வலி இருக்கவே ஜிப்மர் மருத்துவமணையில் அவரை சிகிச்சைக்காக நானும் எனது தம்பியும் சேர்த்தோம். ஜிப்மர் மருத்துவமணையில் எனது கணவருக்கு தலையில் அறுவை சிகிச்சை செய்தார்கள். 1 வாரம் ஜிப்மர் மருத்துவமணையில் எனது கணவர் சிகிச்சை பெற்றார். ராஜிவ் காந்தி மருத்துவமணையில் என் கணவரை எனது தம்பி சிவா, நான் மற்றும் சூரியா அழைத்து சென்றோம். போலிசார் விசாரணையில் இந்த விவரத்தை சொன்னேன். 29 ம் தேதி மாதம் ஞாபகம் இல்லை ராஜிவ் காந்தி மருத்துவமணில் சேர்த்தோம். அங்கே எதுவும் அறுவை சிகிச்சை செய்யவில்லை. அங்கே சேர்த்த போது மருத்துவ ஆவணங்களை காண்பித்தேன். நான்கு நாட்கள் ராஜிவ் காந்தி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். பிறகு இறந்துவிட்டார். பாண்டிச்சேரியிலிருந்து சென்னை மருத்துவமனைக்கு காரில் என் கணவரை அழைத்துச்சென்றோம். இறந்தபிறகு எனது கணவரின் பிரேதத்தை ஊருக்கு ஆம்புலன்ஸில் அழைத்து வந்தோம். எதிரிகள் அடித்த காரணத்தினால்தான் எனது கணவர் இறந்துவிட்டதாக சொல்லி பிரேதத்தை எதிரிகளின் வீட்டில் வைத்துவிட்டோம். எங்கள் வீட்டிலிருந்து அரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மூன்றாவது எதிரி குடியிருக்கும் வீட்டில் வைத்துவிட்டோம். போலிசார் தகவல் அறிந்து அங்கே வந்துவிட்டார்கள் என்றால்

சரிதான். ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் ஏன் பிரேத பரிசோதனை செய்யவில்லை என்று தெரியவில்லை. கேட்டோம் செய்யமாட்டோம் என்று கூறிவிட்டார்கள். அந்த வீட்டிலிருந்துதான் எனது கணவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக எடுத்துச் சென்றார்கள். நான் போராட்டம் செய்த பிறகுதான் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்தார்கள் என்றால் சரிதான். ராஜிவ் காந்தி அரசு மருத்துவமனையில் இறப்பு அறிக்கை கொடுத்தார்கள். அதை போலிசாரிடம் கொடுத்தேன். கடலூர் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது என்னை விசாரித்தார்கள். பிறகு முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்தபோதும் விசாரித்தார்கள். நான் எழுத்து மூலமாக அங்கே புகார் கொடுத்தேன். எதிரிகளை அலைய வைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் நடக்காத சம்பவத்தை நடந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*

*Tmt.G.Saraswathi*

*I Additional District Judge*

*Cuddalore.*